இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

கீழ்ப்படிதல் என்பது மற்றவர்களுக்குச் சுறுசுறுப்பாகவும் தாராளமாகவும் செவிசாய்ப்பது என்ற அதன் ஆழமான அர்த்தத்தில், ஒரு சிறந்த அன்பின் செயலாகக் கருதப்படுகின்றது என்றும், இதன் மூலம் நம் சகோதர சகோதரிகள் வளர்ந்து வாழ முடியும் என்பதற்காக நாம் நம்மை நாமே இழப்பதை ஏற்றுக்கொள்கிறோம் என்றும் கூறினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

# சிறந்த அன்பின் செயலாகக் கருதப்படும் கீழ்ப்படிதல்


திருத்தந்தை பதினான்காம் லியோ துறவறத்தாருடன் (@VATICAN MEDIA)

**துறவற வாழ்வில் சமூக வாழ்க்கையின் முக்கியத்துவம் தூய்மைப்படுத்தலுக்கான இடமாகவும், மறைபரப்பு ஆர்வம் மற்றும் ஆற்றலின் அடிப்படையாகவும் உள்ளது.**

கீழ்ப்படிதல் என்பது மற்றவர்களுக்குச் சுறுசுறுப்பாகவும் தாராளமாகவும் செவிசாய்ப்பது என்ற அதன் ஆழமான அர்த்தத்தில், ஒரு சிறந்த அன்பின் செயலாகக் கருதப்படுகின்றது என்றும், இதன் மூலம் நம் சகோதர சகோதரிகள் வளர்ந்து வாழ முடியும் என்பதற்காக நாம் நம்மை நாமே இழப்பதை ஏற்றுக்கொள்கிறோம் என்றும் கூறினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

செப்டம்பர் 18, வியாழனன்று வத்திக்கானில் இவ்வாண்டு தங்களது சபையின் பொதுப்பேரவை மற்றும் மன்றங்களை சிறப்பிக்கும் துறவற சபையாரைச் சந்தித்தபோது இவ்வாறு கூறினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

துறவற வாழ்வு, கீழ்ப்படிதல், காலத்தின் அறிகுறிக்கேற்ற பணி என்ற தலைப்பில் தனது கருத்துக்களைப் பகிர்ந்துகொண்ட திருத்தந்தை அவர்கள், துறவற சபையினர் நடத்தும் பொதுப்பேரவைகள், திருஅவையின் சிறந்த கொடை ஒரு பெரிய பொறுப்பு என்றும் அதனை இறைவனிடத்தில் ஒப்படைத்து நடத்த வேண்டும் என்றும் கூறினார்.

துறவற நிறுவனங்கள் ஓர் ”அற்புதமான மற்றும் மாறுபட்ட சான்றுகளாகத் திகழ்கின்றன, தூய ஆவியாரின் செயல்பாட்டிற்கு திறந்த மனதுடன், காலத்தின் அடையாளங்களை வெற்றிகரமாக விளக்கி, புதிய தேவைகளுக்கு புத்திசாலித்தனமாக பதிலளித்த நிறுவனர்கள் மற்றும் நிறுவனர்களுக்கு கடவுள் வழங்கிய பல கொடைகளை அவைகள் பிரதிபலிக்கின்றன என்ற திருத்தந்தை புனித இரண்டாம் ஜான் பால் அவர்களின் வரிகளையும் நினைவுகூர்ந்தார்.

துறவற சபையின் நிறுவனர்கள் ஆற்றிய பணிகளைச் சுட்டிக்காட்டி உரையாற்றிய திருத்தந்தை அவர்கள், பதினேழாம் நூற்றாண்டில், இளம் பெண்களுக்கான உருவாக்கத்தின் மதிப்பை சமூகம் எப்போதும் முழுமையாக அங்கீகரிக்காதபோது, பிரிஜிடா டி கெசு மோரெல்லோ அவர்கள், எதிர்காலத்தில் அதிக பலனைத் தரும் பெண்களின் மாண்பினை மேம்படுத்துவதற்கான ஒரு முயற்சியைத் தொடங்கினர் என்றும் எடுத்துரைத்தார்.

புனித காஸ்பேர் டெல் புஃபாலோ, கிறிஸ்துவின் விலைமதிப்பற்ற இரத்தத்தின் பக்தியைப் பரப்புவதன் வழியாக, தனது காலத்தை பாதித்த ”துறவு மற்றும் மதச்சார்பின்மை” என்ற பரவலான மனப்பான்மையை எதிர்ப்பதற்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டார் என்றும், பிரான்ஸ் அருள்பணியாளர் ஜீன்-கிளாட் கோலின், நாசரேத்தின் மரியாவின் தாழ்ச்சி, பணிவு மற்றும் விவேகத்தின் மனப்பான்மையால் ஈர்க்கப்பட்டு பணியாற்றினார் என்றும் கூறினார் திருத்தந்தை.

துறவற வாழ்வில் சமூக வாழ்க்கையின் முக்கியத்துவம் தூய்மைப்படுத்தலுக்கான இடமாகவும், மறைபரப்பு ஆர்வம் மற்றும் ஆற்றலின் அடிப்படையாகவும் உள்ளது என்று எடுத்துரைத்த திருத்தந்தை அவர்கள், ஒரு தனிநபரில் செயல்படும் தூய ஆவியாரின் ஆற்றல், ஒரே நேரத்தில் அனைவருக்கும் செல்கின்றது என்றும் வலியுறுத்தினார்.

மெரினா ராஜ் - வத்திக்கான்

# காசாவில் நடைபெறும் வன்முறை ஓர் இனப்படுகொலை

**ஏறக்குறைய 65,000 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர், அவர்களில் 20,000 க்கும் மேற்பட்ட குழந்தைகள். காசாவின் தெருக்களில் இடிபாடுகளுக்கு அடியில் ஆயிரக்கணக்கானோர் காணாமல் போயுள்ளனர் . ஐ. நா அறிக்கை**

காசாவில் நாம் காண்பது முன்னோடியில்லாத மனிதாபிமான பேரழிவு மட்டுமன்று, குறிப்பிட்ட மக்கள் கொல்லப்படும் ஓர் இனப்படுகொலை என்றும் தெரிவித்துள்ளது ஐக்கிய நாடுகளின் பன்னாட்டு விசாரணை ஆணையம்.

செப்டம்பர் 17, புதனன்று ஐக்கிய நாடுகள் அவையின் பன்னாட்டு விசாரணை ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ள நிலையில், காசாவில் செயல்படும் 20க்கும் மேற்பட்ட மனிதாபிமான அமைப்புகளை அவசர நடவடிக்கைக்கு அழைப்பு விடுத்துள்ளது அவ்வறிக்கை.


போர்ச்சூழல் நிறைந்த இஸ்ரயேல் பகுதி (AFP or licensors)

இஸ்ரேல் நாட்டிற்குள் உள்ளவர்கள் உட்பட உலகளவில் வளர்ந்து வரும் மனித உரிமை அமைப்புகள் மற்றும் தலைவர்களுடன் இந்த ஆணையம் இணைகிறது என்றும், 80 ஆண்டுகளுக்கு முன்பு ஐ.நா.விடம் ஒப்படைக்கப்பட்ட ஆணைக்கு ஏற்ப செயல்பட அனைத்து உறுப்பு நாடுகளையும் அழைப்பதாகவும் அவ்வாணையத்தின் அறிக்கை எடுத்துரைக்கின்றது.

காசாவில் நிலவும் மனிதாபிமானமற்ற சூழ்நிலையை கற்பனை செய்து பார்க்க முடியாது என்றும், மனிதாபிமானத் தலைவர்கள் மற்றும் அமைப்புகளாக, காசா மக்களின் கொளரமான மரணங்களையும் துன்பங்களையும் நேரடியாகக் கண்டவர்களின் முறையீடுகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன, ஆயிரக்கணக்கான உயிர்கள் ஆபத்தில் உள்ளன என்றும் தெரிவித்துள்ளது.

ஏறக்குறைய 65,000 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர், அவர்களில் 20,000 க்கும் மேற்பட்ட குழந்தைகள் என்றும், காசாவின் தெருக்களில் இடிபாடுகளுக்கு அடியில் ஆயிரக்கணக்கானோர் காணாமல் போயுள்ளனர் என்றும் அவ்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

21 இலட்சம் மக்கள்தொகையில், பத்து பேரில் ஒன்பது பேர் வலுக்கட்டாயமாக இடம்பெயர்ந்துள்ளனர் என்றும், பெரும்பாலும் பல முறை - மனித உயிர்வாழ்வை ஆதரிக்க முடியாத அளவுக்கு சிறிய நிலங்களுக்கு மக்கள் இடம்பெயரும் சூழல் ஏற்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளது அவ்வறிக்கை.

மெரினா ராஜ் – வத்திக்கான்

# காசாவில் அமைதி நிலவ திருத்தந்தையின் செப விண்ணப்பம்

**"கொலை செய்யாதே" என்று கட்டளையிட்ட எல்லாம் வல்ல இறைவனுக்கு முன்பாகவும், முழு மனித வரலாற்றின் வெளிச்சத்திலும், ஒவ்வொரு நபருக்கும் எப்போதும் மீற முடியாத மாண்பு உள்ளது.**

காசாவில் உள்ள பாலஸ்தீன மக்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதாகவும், தொடர்ந்து பயத்தில் வாழ்ந்து, ஏற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலைகளில், தங்கள் நிலங்களிலிருந்து கட்டாயப்படுத்தப்பட்டு வெளியேறி உயிர் பிழைக்கின்றனர் என்றும் கூறினார் திருத்தந்தை.

"கொலை செய்யாதே" என்று கட்டளையிட்ட எல்லாம் வல்ல இறைவனுக்கு முன்பாகவும், முழு மனித வரலாற்றின் வெளிச்சத்திலும், ஒவ்வொரு நபருக்கும் எப்போதும் மீற முடியாத மாண்பு உள்ளது, அது எப்போதும் மதிக்கப்பட வேண்டும் மற்றும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார் திருத்தந்தை.

போர்நிறுத்தம், பிணையக்கைதிகளை விடுவித்தல், பேச்சுவார்த்தை வழியாக இராஜதந்திர தீர்வு மற்றும் பன்னாட்டு மனிதாபிமான சட்டத்தை முழுமையாக மதிக்க வேண்டும் என்ற தனது வேண்டுகோளையும் புதுப்பித்த திருத்தந்தை அவர்கள், அமைதி மற்றும் நீதியின் விடியல் விரைவில் விடியட்டும் என்று எனது இதயப்பூர்வமான பிரார்த்தனையில் சேர அனைவருக்கும் அழைப்புவிடுத்தார்.


திருத்தந்தை பதினான்காம் லியோ (ANSA)

இறுதியாக, இளைஞர்கள், நோயாளிகள் மற்றும் புதுமணத் தம்பதிகள் ஆகியோரை நினைவுகூர்ந்து வாழ்த்தி, எப்போதும் நற்செய்தியின் இலட்சியத்திற்கு உண்மையாக இருங்கள், அதை உங்கள் அன்றாட நடவடிக்கைகளில் கடைப்பிடியுங்கள் என்று வாழ்த்திய திருத்தந்தை அவர்கள், புனித இராபர்ட் பெல்லார்மின் திருநாளை நினைவுகூரும் இந்நாளில் தனக்கு நாமவிழா வாழ்த்து கூறி செபித்த அனைவருக்கும் தனது நன்றியினையும் தெரிவித்தார் இராபர்ட் பிரவோஸ்ட் என்னும் இயற்பெயர் கொண்ட திருத்தந்தை பதினான்காம் லியோ.

மெரினா ராஜ் – வத்திக்கான்

# மரியாளின் சேனைக் காங்கிரஸ் கூட்டம்




மரியாளின் சேனை, ரிஜியா தலைமையில், கடந்த 4 செப்டம்பர் முதல் 6 செப்டம்பர், 2025, வரை, போர்ட் டிக்சனில் உள்ள சாம்பனிய இளையோர் மையத்தில் இக்கூட்டம் நடைப்பெற்றது. இக்கூட்டத்தில் கோலாலம்பூர் மறைமாவட்டத்திலிருந்து பல்வேறு பிரிசீடியங்கள், க்யூரியா மற்றும் கோமிடியம், நிர்வாகங்களைப் பிரதிநிதித்து அர்பணிக்கப்பட்ட 36 சேனையாளர்களோடு, மலாக்கா-ஜோகூர், பினாங்கிலும் இருந்தும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இது பல ஆண்டுகளுக்குப் பிறகு நடக்கிற முதல் காங்கிரஸ் கூட்டமாகும். “அன்பும் ஒற்றுமையும்” என்ற உன்னதமான தலைப்பின் கீழ் உறுப்பினர்கள் ஒன்றிணைந்தனர்.

கோலாலம்பூர் (KL) ரிஜியா தலைவர் சகோதரர் இக்னேஷியஸ் வாங் தெய்வீக திட்டத்திற்காக சேனையாளர்கள் ஒன்றிணைந்ததற்கு நன்றி தெரிவித்தார். அனைவரும் பரிசுத்த ஆவியின் வழிகாட்டுதலை நாடி ஒன்றிணைவதற்கும், மரியாளின் சேனையின் பணிக்கான விசுவாசத்தை நிலைநாட்டவும் செயல்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். புதிதாக நியமிக்கப்பட்ட பொறுப்பாளர்களும் சேனையாளர்களுக்காக கலந்து கொண்டதை கவனித்த அவர், நிகழ்வின் போது அனைவரும் உறவுகளை மேம்படுத்தி தங்கள் அனுபவங்களை பகிர வாழ்த்தினார்.

துவக்க திறப்பு விழாவில், அருட்பணியாளர் பிலிப் தே அவர்கள், (OCD), கடவுளின் வார்த்தையை உண்மையான இரக்கத்திற்கு உரிய செயல்களால் வெளிப்படுத்த வேண்டும் என்று நினைவுபடுத்தினார். குறிப்பாக சிறியவர்கள், இளைஞர்கள் தனிமைப்படுத்தப்பட்டவர்களிடம் வார்த்தையை உள்ளடக்கியவாறு இரக்கமும் செயல்பாடுகளும் மாற வேண்டும் என்று வலியுறுத்தினார். இந்த திறப்பு விழா கோலாலம்பூர் ரிஜியாவின் ஆன்மீக இயக்குனர் அருட்பணியாளர். பால் சொங் (OFM Cap) அவர்களின் தலைமையில் நடைபெற்றது.


இரு நாட்கள் நடந்த இந்த காங்கிரசில் பங்கேற்றவர்கள் பிரார்த்தனை செய்து சிந்தித்து, சேனையின் பணிகள், உறுப்பினர் சேர்க்கை, ஒருவர் மற்றவரை தொடர்பு கொள்தல் மற்றும் பல அனுபவங்களை பகிர்ந்தனர். இந்த காங்கிரஸ் இரு மொழிகளில், அதாவது சீன மொழியில் (மாண்டரின்) மறைதிரு பிலிப் தே, மற்றும் ஆங்கிலத்தில் மறைதிரு போல் சொங் அவர்களாலும் வழி நடத்தப்பட்டன. அன்பு என்பது மரியாளின் சேனையாளர்களின் இதயம் என்றும், அதுவே பிரார்த்தனைகள், கூட்டங்கள், மற்றும் பணிகளையும் அர்த்தமுள்ளதாக்கும் என்றும் வலியுறுத்தப்பட்டன. ஒற்றுமை ஒரே மாதிரி இல்லாத ஒன்றாகும்; அது மரியாவின் கொடியின் கீழ் ஒன்றிணைந்து செயல்படுவதாக கொண்டாடப்பட்டது. கடவுளை மகிமைப்படுத்தி இயேசுவின் அன்பில் ஒருங்கிணைக்க நம்மை அழைத்துச் செல்கிறது.

அருட்பணியாளர் போல், சேனையாளர்களை ஆலயத்தின் நான்கு தூண்களில் (புனிதப்பணி, கூட்டமைப்பு, பங்கேற்பு, பணிக்காக அனுப்பி) மீண்டும் அர்ப்பணிக்க ஊக்குவித்தார். இந்த புதுப்பிப்பால் அன்னை மரியாவின் அன்பு மற்றும் ஒற்றுமையை அனைத்து பிரிசீடியங்களிலும், ஆலயங்களிலும் மற்றும் குடும்பங்களிலும் பரப்பத் தூண்டுகிறது.

முக்கிய தருணமாக அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான புதிய பொறுப்பாளர்களை தேர்ந்தெடுத்தனர். அனைத்து உறுப்பினர்களும் சேனையின் செயல்திறனைப் பாதுகாக்க பொறுப்பாளிகள்; தங்கள் தலைவர்களுக்கு ஆதரவு வழங்கி, இயேசுவின் உடலின் பல்வேறு உறுப்புகளாக ஒன்றிணைந்து பணியாற்றுகிறார்கள். தேர்தல் பிரார்த்தனையுடன் நடந்தது, பரிசுத்த ஆவி மற்றும் புனித அன்னை மரியாளின் வழிகாட்டுதலை நாடியது.

புதிய ரிஜியா பொறுப்பாளர்கள் காங்கிரஸ் விவாதங்களில் வெளியிடப்பட்ட பரிந்துரைகளை செயல்படுத்தி சேனையின் பணியை முன்னேற்றும் பணியில் செயல்படுவார்கள். உங்கள் நம்பிக்கையை ஆழப்படுத்தி உங்கள் பங்கில் சேவை செய்யும் அழைப்பை உணர்கிறீர்களா? மரியன்னை சேனையைப் பற்றி தெரிந்துகொள்ள உங்களை அழைக்கிறோம். உங்கள் பங்கின் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு வாராந்திர கூட்டத்தில் இணைய அனைவரும் வரவேற்கப்படுகிறீர்கள்!

# அக்டோபர் மறைபரப்பு மாதத்திற்கான தயாரிப்பு




கோலாலம்பூர்: திருச்சபை அக்டோபர் மறைபரப்பு மாதத்தை நெருங்கி வரும் வேளையில், மலேசியாவின் திருத்தந்தையின் மறைபரப்பு சபைகள் (PMS) அனைத்து கத்தோலிக்கர்களையும் "எல்லா மக்களிடையேயும் நம்பிக்கையின் மறைபரப்பாளர்கள்" என்ற 2025 ஆம் ஆண்டின் மறைபரப்பு தின கருப்பொருளின் கீழ், மறைபரப்பு சீடத்துவத்திற்கான தங்கள் அர்ப்பணிப்பைப் புதுப்பிக்க அழைக்கின்றன.

இந்த ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்ற PMS வருடாந்திர ஆண்டுக் கூட்டத்தின் போது, ஆயர் பேரவைத் தலைவர் மேதகு ஜூலியஸ் கித்தோம் மற்றும் ஒன்பது மறைமாவட்ட இயக்குநர்கள், நாடு முழுவதும் மறைபரப்பு உணர்வை வலுப்படுத்த ஜெபம், கலந்துரையாடல் மற்றும் திட்டமிடலுக்காக ஒன்றுகூடினர்.

மறைபரப்பு மாதத்திற்கான முக்கிய முயற்சிகளில் சில:

- ஆயரின் செய்தி: செப்டம்பர் கடைசி வார இறுதியில் அனைத்துப் பங்குகளிலும் ஆயர் ஜூலியஸ் அவர்களின் முன் பதிவு செய்யப்பட்ட செய்தி ஒளிபரப்பப்படும். இது ஒரு ஆன்மீகத் தொடக்கத் தளமாக அமைந்து, இறைமக்கள் மறைபரப்பு மாதத்தில் புதிய உற்சாகத்துடன் நுழைய ஊக்குவிக்கும்.
- படைப்பின் மீதான அக்கறை அர்ப்பணிப்பு: கழிவுகளைக் குறைக்கும் நோக்கில், இந்த ஆண்டு சுவரொட்டிகளோ அல்லது காகித உண்டியல்களோ அச்சிடப்படாது. அதற்குப் பதிலாக, பங்குகளுக்கு இலக்கனவியல் (digital) வளங்கள் வழங்கப்படும். மேலும், முடிந்தவரை மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட்களைப் பயன்படுத்த ஊக்குவிக்கப்படும் — இது படைப்பைப் பராமரிப்பதற்கான நமது கூட்டு முயற்சியின் அடையாளமாகும்.

  மலேசிய PMS-இன் தேசிய இயக்குநர் அருட்பணியாளர் விக்டர் லூயிஸ், இந்த மாற்றம் நடைமுறைக்கு உகந்தது என்றும் தீர்க்கதரிசனமானது என்றும் வலியுறுத்தினார். "நாம் இன்றைய உலகில் நம்பிக்கையின் மறைபரப்பாளர்களாக இருக்க அழைக்கப்பட்டுள்ளோம். இலக்கனவியல் முறைக்கு மாறுவதன் மூலமும், மறுசுழற்சி செய்யப்பட்ட வளங்களைப் பயன்படுத்துவதன் மூலமும், நமது மறைபரப்புப் பணியைப் படைப்பைப் பராமரிக்கும் பொறுப்புடன் இணைக்கிறோம். இது நமது விசுவாசத்தை உறுதியான வழிகளில் வாழவும், மற்றவர்களை அவ்வாறு செய்யத் தூண்டவும் கிடைக்கப்பெற்ற ஒரு வாய்ப்பாகும்."
- மறைபரப்புப் பணிக்கு ஆதரவு: நற்செய்தியைப் பரப்புவதில் ஒத்துழைப்பையும் படைப்பாற்றலையும் ஊக்குவிக்கும் வகையில், விண்ணப்பிக்கும் எந்தவொரு மறைமாவட்ட புதிய நற்செய்தி அறிவிப்பு நிறுவனத்திற்கும் தலா ரிம 20,000-யும், மற்ற மறைபரப்பு தொடர்பான குழுக்களுக்கு தலா ரிம 10,000-யும் வழங்குவதாக உறுதியளித்துள்ளது.
- இலக்கனவியல் வளங்கள்: திருத்தந்தையின் மறைபரப்பு தினச் செய்தியின் மென் பிரதிகள் மற்றும் பிற பொருட்கள் மறைமாவட்டங்களுக்கு விநியோகிக்கப்படும். இது எளிதான அணுகலையும் பரந்த அளவில் விநியோகிக்கப்படுவதையும் உறுதிசெய்யும்.
- சிறுவர் மறைபரப்பு இயக்கம்: குழந்தைகளும் மறைபரப்பாளர்களே என்பதை அவர்களுக்கு நினைவூட்டி, அவர்கள் மீது சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது.
  - o அக்டோபர் 13 ஆம் தேதி இரவு 7:00 மணிக்கு குழந்தைகளுக்கான உலகளாவிய புனித நேரம் மற்றும் செபமாலை நடைபெறும். இது ‘சண்டக்கான்’ மறைமாவட்டத்திலிருந்து நேரடியாக ஒளிபரப்பப்படும்.
  - o யூபிலி ஆண்டை முன்னிட்டு, குழந்தைகளுக்கு மறைபரப்பு செபமாலைகள் வழங்கப்படும். அதிகரித்து வரும் செலவுகள் காரணமாக, எண்ணிக்கை குறைக்கப்படும், ஆனால் அதன் குறியீட்டு மதிப்பு வலுவாக உள்ளது. செபமாலைகளை வரவழைத்து, பொட்டலம் கட்டும் பணி கூச்சிங் உயர்மறைமாவட்டத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அருட்பணியாளர் விக்டர் ஒவ்வொரு பங்கையும் கத்தோலிக்க இல்லத்தையும் மறைபரப்பு மாதத்தில் தீவிரமாகப் பங்கேற்க அழைக்கிறார். "மறைபரப்பு மாதம் என்பது தொடர் நிகழ்வுகள் மட்டுமல்ல — அது கிறிஸ்துவை மற்றவர்களுக்குக் கொண்டு செல்வதற்கான நமது திருமுழுக்கு அழைப்பின் நினைவூட்டலாகும். வாருங்கள், நாம் அனைவரும் ஒன்றிணைந்து நமது பங்குகளிலும் சமூகங்களிலும் மறைபரப்பு உணர்வைத் தட்டி எழுப்பி, உண்மையான நம்பிக்கையின் மறைபரப்பாளர்களாக மாறுவோம்."

அக்டோபர் நெருங்கி வருவதால், ஒவ்வொரு கத்தோலிக்கரையும் உண்மையான நம்பிக்கையின் மறைபரப்பாளராக மாற்றத் தூண்டும் வகையில் செப வழிபாடுகள், மறைபரப்புச் செயல்பாடுகள் மற்றும் மறைக்கல்வி அமர்வுகளைத் தயாரிக்குமாறு பங்குகள் ஊக்குவிக்கப்படுகின்றன.

# பணம் வேண்டும், பணத்தாசை வேண்டாம்

இன்றைய நற்செய்தியில் இயேசு கூறும் “செல்வரும் இலாசரும்” உவமை எதை பற்றிப் பேசுகிறது?. இறப்புக்குப் பிந்திய வாழ்வுப் பற்றி பேசுகிறதா? செல்வம் சேர்ப்பது பாவம் எனக் கூறுகிறதா? ஆடம்பரமாக வாழ்வது தவறு எனச் சுட்டிக்காட்டுகிறதா? விலையுயர்ந்த ஆடை அணிவது குற்றம் எனக் குறிப்பிடுகிறதா? நாவிற்கு சுவையான உணவைச் சாப்பிடுவது கேடு எனச் சொல்கிறதா? யார் யார் மோட்சத்திற்கு அல்லது நகரத்திற்குப் போவார்கள் என்பதைப் பற்றி சொல்கிறதா? இத்தனை கேள்விகளுக்கு ‘இல்லை’ என்பதுதான் பதில். இதில் கவனிக்க வேண்டியது என்றால் பணக்காரர்கள் மீது இயேசு தண்டனை தீர்ப்பு வழங்கவில்லை. பணக்காரர்களை ஒதுக்கி விட்டு, ஏழை மீது அவர் பரிவும் காட்டவுமில்லை.

இயேசு கூறிய இந்த கதையைக் கேட்கும் போது, 1960ஆம் ஆண்டு வெளிவந்த பாடல் ஒன்று நினைவுக்கு வருகிறது.

‘மனிதன் எல்லாம் தெரிந்து கொண்டான், வாழும் வகை புரிந்து கொண்டான், இருந்த போதும் மனிதனுக்கு, ஒன்றும் மட்டும் தெரியவில்லை, மனிதனாக வாழ மட்டும், மனிதனுக்குத் தெரியவில்லை’

மனிதம் என்பது எந்தச் செயலிலும் சக மனிதனுக்குக் கேடு விளையாதபடி செயல்படுவது. சிந்திக்கத் தெரிந்த மனிதன் மட்டுமே சுயநலத்தால் பிற மனிதனுக்குக் கேடு விளைவிக்கின்றான். அப்படி கேடு நினைக்காமல் செயல்படுவதே மனிதம். பறக்கும் பறவைப் போல வானில் பறக்க மனிதன் தெரிந்து கொண்டாலும், மனிதத்தை மறந்து விட்டான். இன்றைய உவமையில் இயேசு இதனையே சுட்டிக்காட்டுகிறார்.

பணம் பத்தும் செய்யும்; பணம் பாதாளம் வரை பாயும் போன்ற பழமொழிகள் பணத்தின் ஆளுமையையும் வீரியத்தையும் குறிப்பிடுகின்றன. ஆனால் அதனால் மனிதன் படும் அவதியைச் சொல்வதில்லை. பணமே எல்லாத் தீமைக்கும் மூலக்காரணம் எனச் சொல்வாரும் உண்டு. இல்லை, பணத்தின் மீது மனிதன் கொண்ட பேராசைதான் எல்லாத் தீமைக்கும் ஆணிவேர். இந்த உவமைக்கு முன்வரும் பகுதியைப் படித்தால், பண ஆசைமிக்க பரிசேயர்களைக் குறி வைத்து இயேசு இந்த கதையைக் கூறுகிறார் என்பது புரியும். இவர்களுக்கு ஐயோ கேடு என இறைவாக்கினர் ஆமோஸ் முதல் வாசகத்தில் எச்சரிக்கிறார். இத்தகையோர் இல்லாதொழிவர் என அவர் சாபமிடுகிறார் (ஆமோ.6:7).

அப்படியென்றால், மனிதனாய் வாழ்வது அவ்வளவு கடினமா? இல்லை என்று புனித பவுல் இரண்டாவது வாசகத்தில் தமது சீடர் தீமொத்தேயுவிற்கு கூறுகிறார். “நீதி, இறைப்பற்று, நம்பிக்கை, மனஉறுதி, பணிவு ஆகியவற்றை நாடித்தேடு...நிலைவாழ்வைப் பற்றிக் கொள்” (1தீமொ.6:11-12) என அவர் அறிவுறுத்துகிறார். ஆகவே, இயேசு அன்பு காட்டியது போல, பரிவு காட்டியது போல, நாமும் வாழ்ந்தால் பூமியில் மோட்சத்தைக் காணலாம். மோட்சம் காண விரும்பும் மனிதன் மனிதநேயத்தைக் கைக்கொள்ள வேண்டும். மனிதநேயம் உள்ளவர்களால்தான் மனிதத்தை மீட்டெடுக்க முடியும். அதனால்தான் என்னவோ கடவுளும் மனிதப் பிறப்பெடுத்தார் போலும். இயேசு காட்டிய வழியில் மனிதத்தோடு வாழ்ந்து, வரியோரையும் வாழ வைப்போம்.

அந்தோணி இன்னாசி – சைபர்ஜெயா

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.